# CHAPTER – 26

# பழந்தமிழரின் கோயில் கட்டிடக்கலை தொழில் நுட்பம் – ஓர் ஆய்வு

**முனைவர் து. இராஜா**
உதவிப்பேராசிரியர், முதுகலை வரலாற்றுத் துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.

**முன்னுரை**

ஓரினத்தின் நாகரிகச்செழுமையினை எடுத்துக்காட்டும் சின்னங்களில் குறிப்பிடத்தக்கது கட்டிடக் கலையாகும். பருப் பொருளாலான கட்டிடங்கள் அதிலும் கருங்கற்களாலான கட்டிடங்கள் படைத்தவர்கள் மாண்ட பின்னும் பன்னுற்றாண்டுகள் நிலைபெறத்தக்கதாகும். எனவே ஓரினத்தின் நாகரிகத்தினை நீண்டகாலம் நிலைபெறச் செய்யும் கட்டிடக்கலைக்குத் தனியிடமுண்டு. கோயிற் கட்டிடக்கலை சிற்பமும் ஓவியமும் கலந்தமையும் தன்மையது. எனவே புறகலைகளின் வாழ்வுக்கும் உறுதுணையாகும் இக்கலை தலைமை பெறுவது வியப்புக்குரியதன்றாம். சங்க கால மக்களின் சமயம் சாராக் குடியிருப்பு மனைகள் இருந்ததாக இலக்கியங்களில் காணலாம். சங்க காலந் தொட்டு கட்டிடக்கலை எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்ககால கோயில் கட்டிடக்கலை நுட்பம்** சங்க கால மக்கள் பல்வேறு தெய்வங்களை வணங்கினர் என்று கண்டோம். அத்தெய்வங்களுக்கு கோயில்களும் இருந்திருக்க வேண்டும். சிவபெருமான் கோயில் '**முக்கட் செல்வன்நகர்**'[1] என்று புறநானூற்றிற் சுட்டப்படுகிறது. அது செங்கல் மரம் சுண்ணாம்பு ஆகிய பொருள்களால் சுட்டப்பட்டது என்று கருதலாம். சிதைந்து அழிவுக்குள்ளான ஒரு கோயில் பற்றி அகநானூறு குறிப்பிடுகிறது.

> **"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து எழுதணி கடவுள் போகலின் புல்லென்று ஒழுகு பலிமறந்த மெழுகாப் புன்றிணை"**[2] இதனால் அறிவது கோயிலுக்கு உயர்ந்த சுவர்கள் இருந்தன என்பதும் மரவிட்டங்கள் இருந்தன என்பதுமாகும். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் பல்வேறு கோயில்கள் பேசப்பட்டுள்ளன.

> **"காடமர் செல்விகழி பெருங் கோட்டமும் அருந்தவர்க் காயினும் அந்தணர்க் காயினும்**
> **ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்**
> **.......................................................................**
> **.......................................................................**
> **குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன**

**சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்''**[3] என்ற மணிமேகலைப் பகுதியாகும்.

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் அறுமுகச் செவ்வேள்**
**அணிதிகழ் கோயிலும் வால்வளை மேனி நெடியோன் கோயிலும் மாலை**
**வெண்குடை மன்னவன் கோயிலும்''**[4]

எனபது சிலப்பதிகாரப் பகுதியாகும்.

இங்ஙனம் சுதையாலும், செங்கல்லாலும் கட்டிய கோயில்கள் தவிர முற்காலத்தில் மரத்தாலேயே கோயில்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என அறிஞர் கூறுவர். கேரளத்தில் இன்றளவும் அத்தகு கோயில்கள் உள்ளன. குருவாயூரப்பன் கோயில் இத்தகையதேயாகும். இன்றும் தில்லையிலுள்ள சிற்றம்பலமாகிய சபாமண்டபம் மரத்தாலானதே. அதன் கூரை கெடாமல் தடுப்பதற்காகவே அது பன்முறை பொன்னோடு வேயப்பட்டது.

இனி நாயன்மார்களும் ஆழ்வார்களும் வாழ்ந்த காலத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் இருந்துள்ளன. அவையாவும் செங்கற்களால் ஆனவையே. சங்கத்து இறுதிக் காலத்தில் ஆண்ட கோச்செங்கணான், சிவபெருமானுக்காக எழுபது கோயில்கள் எழுப்பியதாகத் திருநாவுக்கரசரும், திருமங்கையாழ்வாரும் பாராட்டியுள்ளனர்.

**"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோளீசற்கு எழில்மாடம் எழிபது செய்துலகமாண்ட**
**திருக்குலத்துவளச் சோழன்''** என ஆழ்வார் புகழ்வார்[5]. அப்பர் பெருமாள் அவன் கட்டியவை எழுபத்தெட்டு என்று கூறுவதோடு அவற்றின் வகைகளையும் குறித்துள்ளது வியத்தற்குரியதாகும்.

**"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்சேரும் பெருங்கோயில்**
**எழுபதினோ டெட்டும் மற்றும் கரக்கோயில் கடிபொழில் சூழ்ஞாழற்**
**கோயில் கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில் இருக்கோதி**
**மறையவர்கள் வழிபட்டேத்தும் இளங்கோயில் மணிக்கோயில்**
**ஆலக்கோயில் திருக்கோயில் சிவனுறையும் கோயில்சூழ்ந்து**
**தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே''**

என்கிறார்.[6]

இங்குக் குறிக்கப்பட்ட கோயில் வகைகள் இன்ன அமைப்புடையன வென்று கூறுவது கடினமென்றும், சிற்ப நூல்கள் குறிக்கும். விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்கந்த்காந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிருஷ்டம், கேசரம் என்னும் ஏழு வகையான கோயில் தமிழ்ப் பெயர்களே கரக்கோயில், ஞாழற்கோயில், முதலியன என்றும் திரு. மயிலை, சீனி, வெங்கடசாமி அவர்கள் கூறுகின்றார்கள்.[7]

**ஆலக்கோயில்**

ஆலக்கோயில் என்பது ஆனைக்கோயில் என்பதன் மரூஉவென்றும், சிற்ப ல்கள் கூறும் கஜபிருஷ்ட விமானக் கோயில் அல்லது ஹஸ்திபிருஷ்ட விமானக் கோயில் என்றும் கூறுகின்றனர். யானையின் முதுகு போல் இதன் கூரை அமைந்தது என்பர். திருக்கச்சூர், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு ஆகிய இடங்களிலுள்ள கோயில்களை இவ்வகைக்கு எடுட்துக்காட்டுகளாக கூறலாம்.[8]

**இளங்கோயில்**

பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் பொழுது அதனருகே இறைவனை எழுந்தருளச் செய்வர் என்றும், அவ்வாறு எழுந்தருளச் செய்வர் என்றும், அவ்வாறு எழுந்தருளச் செய்யும் போது அமையும் கோயில் இளங்கோயில் என்றும் அவர் கருதுவர். இதற்குப் பாலாலயம் என்னும் பெயருண்டாம். சிற்பநூல் கூறும் ஸ்ரீகரக்கோயில் என்ற வகை இதுவாகலாம் என்றும் கூறி இது நான்கு பட்டை விமானம் கொண்டதென்பார். கடம்பூர், மீயச்சூர்க் கோயில்களும், மாமல்லையிலுள்ள திரௌபதி இரதமும் இவ்வகையை சேர்ந்தவை என்கிறனர். சாசனச் சான்றுகள் கொண்டு பலவிடங்களில் இத்தகு இளங்கோயில்கள் இருந்ததாக கூறுவர்.[9]

**கரக்கோயில்**

வட்டமான விமானமுடையது ‘விஜயம்’ என்னும் வகையினதென்றும் கரக்கோயில் என்பது இதுவாகலாம் என்றும் கூறுவர். திருக்கடக்பூக் கோயிலை அப்பர் ‘தெங்கடம்பைத் திருக்கரக் கோயிலான்’ என்று குறிப்பதனையும், சுந்திரமூர்த்தி நாயனார் இதனைக் குறிப்பிட்டுள்ளதையும் எடுத்துக்காட்டலாம். ஆனால் திரு. டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் இது சக்கரத்தோடு கூடிய தேர் வடிவமானது என்கிறார். காட்டுமன்னார் கோயிலுக்கண்மையிலுள்ள மேலைக்கடம்பூர் கோயிலொன்றே இவ்வமைப்புடையதென்றும்
கூறுகிறார்.[10]

**ஞாழற்கோயில்**

ஞாழல் மரத்தினால் அமைந்த கோயில் இப்பெயர் பெற்றது என்று கூறுவாரை மறுத்து, இது கோயில் வகைகளில் ஒன்றாகவே இருந்திருக்க வேண்டுமென்றும் இதன் அமைப்பினைத் தற்போது துணிய இயல வில்லை என்றும் கூறியுள்ளார். திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள். திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கடை ஞாழற்கோயிலாகும் என்பார்.[11]

**கொகுடிக்கோயில்**

கொகுடியென்னும் மரத்தால் கட்டப்பட்டதென்பார் கூற்றை மறுத்து, இதன் அமைப்பினைத் திட்டமாகக் கூற இயலாமையும் ஒப்புக்கொண்டு, ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம் என்பவற்றில் ஒன்றாகக் கூடும் எங்கின்றார். வட்டமான சிகரம் கர்ண கூடத்தோடு அமையுமாயின் அது ஸ்ரீபோகமாகுமென்றும், அதுவே நடுவில் இலை வரிசையுடன் அமைந்தால் ஸ்ரீவிசாலம் என்றும் கூறுகிறார். கருப்பறியலில் உள்ள கோயிலைக் கொகுடிக் கோயிலென்று சுந்தரரும் அப்பரும் பொழிந்துள்ளனர்.[12]

**மணிக்கோயில்**

இதன் அமைப்பும் விளங்கவில்லை என்று கூறி, எட்டு அல்லது ஆறுபட்டையுடைய விமான அமைப்புடைய தாகலாம் என்ற ஊகத்தையும் கூறி, ‘ஸ்கந்த காந்தம்’ என்னும் வகையினதாக இருக்கலாம் என்கிறார். இச்செய்திகள் சிற்ப நூலறிஞர்களால் மேலும்
ஆயத்தக்கவையாகும்.[13]

### பெருங்கோயில்

இவ்வகைக்கோயில் மாடக்கோயில் என்றும், செய்குன்றுகளின் மேல் அமைக்கப்பட்டவை என்றும் கூறுவர். இவை யானைகள் ஏறா வண்ணம் உயரமாகக் கட்டப்பட்டனவென்றும், யானை படுத்திருப்பது போல்தோன்றுவதால் தூங்கானை மாடம் எனப்படுமென்றும் கூறுவர். நன்னிலம், குடவாயில், வைகல், தண்டலைச்சேரி, பெண்ணாடகம் என்னும் ஊர்களில் இத்தகு கோயில்கள் உள்ளனவென்பர்.[14]

### முடிவுரை

சங்க காலம் முதல்கோயில் கட்டிடக்கலை வளர்ச்சியடையத் துவங்கியது என்பதை மறுக்கமுடியாது. மேற்கண்ட ஆதாரங்களின் துணைக் கொண்டு பார்க்குபோது பழந்தமிழர்கள் கோயில் கட்டிடக்கலையில் சிறந்து விளங்கியுள்ளனர். சங்க காலத்திற்கு பிறகு பல்லவர், பாண்டியர், சோழர்கள், நாயக்கர்கள் போன்றவர்களின் கோயில் கட்டிடக்கலைக்கு பழந்தமிழரின் கோயில் கட்டிடக்கலையே மிகச் சிறந்த அடித்தளமாகும் என்றால் அது மிகையாகாது.

### அடிக்குறிப்புகள்

1. டாக்டர் ந.சுப்பிரமணியன் – சங்ககால வாழ்வியல் பதிப்பு 1986 சென்னை–98 ப–435
2. டாக்டர் ந. சுப்பிரமணியன் – சங்ககால வாழ்வியல் பதிப்பு1986 சென்னை–98 ப–437
3. குமரி.சு.நீலகண்டன் திருக்குறள் பதிப்பு 2008 சென்னை– 600 002 ப– 84 ப–100
4. கம்பன் கம்பராமாணயம் பதிப்பு 1955 சென்னை – 600 098 ப–253
5. தொல்காப்பியர் தொல்காப்பியம் கழக வெளியிடு பதிப்பு –1923 ப–28
6. முனைவர் ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பதிப்பு 2006 சிதம்பரம் – 608 001 ப–435
7. முனைவர் ச.வேசுப்பிரமணியன் சங்க இலக்கியம் பதிப்பு 2006 சிதம்பரம் – 608 001 ப–434
8. ஊ.வே.சாமிநாதஐயர், பழந்தமிழர் இலக்கியம் பதிப்பு 1957 சென்னை ப–236
9. டாக்டர் ந.சுப்ரமணியன் சங்ககால வாழ்வியல் பதிப்பு 1986 சென்னை ப–46
10. டாக்டர் ந.சுப்ரமணியன சங்ககால வாழ்வியல் பதிப்பு 1986 சென்னை ப–47